


# விலங்குகள் பள்ளி

**ஆங்கிலத்தில் : ஜாரஜ்.எச்.ரீவிஸ்**

**தமிழில் : உத்ரா துரைராஜன்**

சார் ∴.போர்ஸ்டன், ஜிம் க்ராண்ட் மற்றும் இர்வ் ரிச்சர்ட்ஸன் ஆகியோரின் முகவுரை மற்றும் முடிவுரையுடன்

**படங்கள் - ஜாய்ஸ் ஆர்சர்ட் காரமெல்லா**

விலங்குகள் பள்ளி : தனிமனித வேறுபாடுகள் சார்ந்த பள்ளிக் கல்வித் திட்டத்தை அமுலாக்குவது பற்றியது.


ஜாரஜ்.எச்.ரீவிஸ் எழுதியது, ஜாய்ஸ் ஆர்சர்ட் காரமெல்லா வரைந்த படங்களுடன்



## சமர்ப்பணம்

ஒரே மாதிரியாக வரையறுக்கப்பட்ட தேர்வுகளிடம் சிக்கி,


முறையற்ற பாடத்திட்டம் மற்றும் தரநிர்ணயத்தால், ஞாயமற்ற வகைகளில் துன்புற்ற குழந்தைகளுக்கும், பெரியோருக்கும் இது சமர்ப்பணம்.



# முன்னுரை

1940களின் ஆரம்பத்தில் ஸின்ஸினாடி பொதுப் பள்ளிகளின் துணை-கண்காணிப்பாளராக பணியாற்றிக்கொண்டிருந்த ஜாரஜ்.எச்.ரீவிஸ் ஓர் அறைகூவல் விடுத்தார்.
அதனை அவர் ***விலங்குகள் பள்ளி*** என அழைத்தார்.
பொதுப் பள்ளிக் கையேட்டிற்காக *(Public Scool Bulletin)* எழுதப்பட்ட இந்த *விலங்குகள் பள்ளி* காலத்தைக் கடந்து நிற்கிறது.
குருட்டாம்போக்காய் மேற்கொள்ளப்படும் சீரமைப்புக் கொள்கைகளால் ஏற்படும் அபாயத்தை சரியான தருணத்தில் ஒலிக்கிறார் என்பதை வாசகர்கள் உணர்வீர்கள்.

எங்களின் செய்தி இதோ : குழந்தைகள் எப்போது சிறப்பாகக் கற்கிறார்கள் தெரியுமா? அவர்களுடைய பலத்தை ஆசிரியர்களாகிய நாம் உணர்ந்து, அவற்றை வளர்த்து, அவர்களுக்குத் தகுந்தார்போல் சவால்கள் தந்தும், அவர்களுடைய பலவீனங்களை கண்டுகொண்டு, அவர்களை தட்டிக்கொடுத்து வளர்க்கும்போதுதான் என்று நம்புங்கள். செயலில் இறங்குங்கள்.




# முன் ஒரு காலத்தில்...




ஒரு "புதிய உலகத்தின்" சிக்கல்களை சமாளிக்க வீரதீரமாய் ஏதேனும் தாங்கள் செய்தே ஆகவேண்டும் என்று விலங்குகள் முடிவு செய்தன.



அதற்காக, ஒரு பள்ளியை உருவாக்கின.




செயல்முறை பாடத்திட்டம் ஒன்றை வகுத்தன - ஓடுதல், ஏறுதல், நீந்துதல் மற்றும் பறத்தல் உண்டு.




பாடத்திட்டத்தை மிகச் சுலபமாய்

அமுலாக்குவதற்கு வழிசெய்ய,

எல்லா மிருகங்களும் எல்லாப் பாடத்தையும்

கற்றன.



வாத்து நீச்சலில் மிகச் சிறந்து விளங்கியது - சொல்லப்போனால், அதன் பயிற்சியாளரைவிடவும் மிக நன்றாக நீந்தியது.




ஆனால் பறத்தல் பாடத்தில் சுமாரான மதிப்பெண்களே பெற்றது.

ஓட்டத்தில் ரொம்ப மோசம் அதன் செயற்பாடு.




ஓட்டப் பாடத்தில் மிகமிகக் குறைந்த நிலையில் வாத்து இருந்ததால், பள்ளிநேரத்துக்குப் பின், தங்கியிருந்து ஓட்டப் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், இதனால் நீச்சல் பயில நேரமின்றி நின்றுபோனது.




அவனுடைய அகன்ற பிஞ்சுப் பாதங்கள் நார்நாராய் போகும்வரை இது தொடர்ந்தது. அவன் நீச்சலிலும் சராசரி நிலையை அடைந்தான்.

ஆனால் சராசரிநிலை என்பது பள்ளியில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. அதனால் யாரும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை, பாவம் அந்த வாத்தைத்தவிர!




ஓட்டப் பாடத்தில் வகுப்பிலேயே முன்னிடம் வகித்தான் முயல். ஆனால் அவனுடைய பயத்துக்கும் படபடப்பும் ஒரு காரணம் உண்டு...




.... அதுதான் நீச்சலில் தேர அவன் செய்ய வேண்டிய பயிற்சி!





அணிலோ துள்ளி குதித்து சடசடவென ஏறினான், பறத்தல் வகுப்பால் வந்த தோல்வியால் துவளும்வரை! அடச்சீ, இது என்ன கொடுமை? அவன் ஆசிரியர் மேலிருந்து அவனை கீழே குதிக்கவிடாமல், எப்போதும் கீழிருந்து மேலே பறக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்.



பறக்க முயன்றுமுயன்று கால் ஒடிந்ததுதான் மிச்சம்.


இதனால் வந்த அசதியில் ஏறுதலில் Cயும், ஓட்டத்தில் Dயும் பெற்றதுதான் பலன்.




கழுகம்மாவால் எப்போதும் தொல்லைதான்.
எதுவும் சொல்படி கேட்கமாட்டாள். மாறிமாறி
கடுமையான தண்டனை பெறுவதற்கே
அவளுக்கு சரியாய் இருந்தது.





ஏறுதல் வகுப்பில் எல்லாரையும் விஞ்சி மரத்தின் உச்சியில் போய் அமர்ந்தாள் கழுகம்மா. சரிதான்! அதற்காக அவள் வழியிலேயே விட்டுவிடமுடியுமா என்ன? மரமேற்றப் பாடம் என்றால் மரத்தை பிடித்துக்கொண்டு அடிமேல் அடியாய் ஏற வேண்டும்தானே? அவள் கூறுவதெல்லாம் சரிப்படாது.





வருட இறுதியில், அந்தக் கொழகொழா ஈல் ரொம்ப நன்றாக நீந்தினான். கொஞ்சம் ஓடினான். ஏறக்கூட ஏற முடிந்தது அவனால். அட, துளி பறந்தானே.

மிக அதிக சராசரி பெற்றவன் அவனே!




அவன்தான் வகுப்பின் முதல் மாணவன்,


வெற்றியாளன்!




ப்ரெய்ரீ நாய்கள் பள்ளியை புறக்கணித்தன. அதனால் நிர்வாகம் தங்களுக்கு கூடுதல் வரி விதிக்கக்கூடாது என்றும், குழிதோண்டுதலையும் பூமியில் வலையமைத்தலையும் பாடத்திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்தன.




பேட்சரிடம் பயிற்சிபெற தங்கள் குழந்தைகளை அனுப்பின. க்ரௌண்ட் ஹாகுகளும், கோ.ஃ.பர்ஸூம் கூட அந்த வகுப்பில் தத்தம் குழந்தைகளை சேர்த்தன. ஆங்! வெற்றிகரமான தனியார் பள்ளி ஒன்று உருவானது!!



இந்த நீதிக்கதையில் ஏதேனும்

கருத்து உள்ளதா?




# முடிவுரை

*கல்வியாளராய் நம் பணிக்காலம் முழுதும், ஒவ்வொரு மாணவனும் தனித்தன்மை வாய்ந்தவன், தனியொருவன் எனும் கருத்தை ஊர்ச்சிதப்படுத்துகிறோம். கட்டாயச் சோதனைகள், தேர்ச்சி நலை மதிப்பெண்கள், IQசோதனைகள், எல்லாமே இதனை உறுதிப்படுத்துகின்றன.*

*இந்த வேறுபாட்டை எல்லாம் பொதுவெளியில் ஒத்துக்கொள்ளவும், மேலும் இவை பற்றி ஆவணப்படுத்தவும், வாசிக்கவும், கலந்தாடல்களில் பங்கேற்கவும், கற்கவும் செய்கிறோம். ஆனால் அது எது வரை?*

*தீர்க்கமான இறுதி முடிவுகள் இருக்கும்பட்சத்திலும்கூட, பல மாவட்டங்களும் எல்லா மாணவர்களுக்கும், அவர்களுடைய திறமைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் ஒரே பாடத்திட்டத்தை ஒரே மாதிரியாக கல்வியாளர்கள் கற்பிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.*

*நல்லகாலம், முளைபற்றிய தற்கால ஆராய்ச்சி, முக்கியமாக ஹோவர்ட் கார்ட்னர் பன்னறிவுத்திறன் (Multiple intelligence) கோட்பாடு, நாம் எவ்வாறு கற்கிறோம் என்பதை புரிந்துகொள்ள மேன்மேலும் வழிவகுக்கின்றன.*

நம்முடைய கல்விசார் குழப்பங்களுக்கான தீர்வுகளைக் காணமுடியும், கண்டே தீரவேண்டும் என்று நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான கல்வியாளர்களும் நாமும் நம்புவதைப்போல ஜார்ஜ்.எச்.ரீவிஸூம் நிம்பினார்.
குழந்தைகளை மிக உயர்ந்த, ஆனால் வெவ்வேறு நிலையில் அமர்த்தவே பள்ளிகள் மூலம் மக்கள்பணம் செலவிடப்படவேண்டும் என்பதே நம் உள்ளக்கிடக்கை.

ஏனெனில் "கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தை முடிப்பது" என்பது மட்டுமே நம் சமுதாயத்தை நிச்சயம் மேம்படுத்தாது. நம் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வித்தியாசமான மாணவன் என்பதை கண்டுணரத் தவறிவிட்டால், சமுதாய முன்னேற்றம் சாத்தியமாகாது.

நினைவில் கொள்க : எல்லாக் குழந்தைகளுக்கும் கற்பிக்கும்படியாக ஒரே ஒரு சரியான வழி என்பது கிடையாது. ஆனால், ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியாக கற்பிக்க சரியான வழி ஒன்று உண்டு. உங்களுக்கு திட்டக்குழு உறுப்பினர் யாரேனும் தெரியுமானால், இந்தப் புத்தகத்தின் பிரதியை அவரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.





# விலங்குகள் பள்ளி

*காலத்தைக் கடந்த ஒரு நீதிக்கதை. அகிலம் முழுவதும் புரிந்துகொண்ட, மிக வலிமை வாய்ந்த ஒரு கருத்தை தன்னகத்தே உடையது.*

*மாணவர்களை தனித்தன்மை வாய்ந்தவனாய், கற்பவனாய், தனியனாய் அடையாளம் கண்டுணரத் தவறும், அக்கறையற்ற கல்வி சம்பந்தமான மாற்றங்கள், பெருஞ்சீர்திருத்தங்கள் அனைத்தும் சந்தேகமின்றி நம் மாணவர்களை தோல்விப் பாதையில் தள்ளும்.*